REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 3உ திங்கள் (17—12—56) ★ ★ வெளியூர்: மார்கழி 4உ செவ்வாய் (18—12—56) [இதழ் 163

வெள்ளத்தால் நாட்டில் விளைந்த விபரீதம்

★

"வெள்ளத்தால் 34,000 சதுர மைல் பரப்பளவு நிலமும், 164 இலட்சம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்; 515 பேர் உயிர் இழந்தனர்; 3,53,010 வீடுகள் முழுமையிலுமோ அரைகுறையாகவோ சேதமடைந்தன; மொத்தம் ரூ. 49 கோடி பெறுமான மதிப்புள்ள சொத்துக்களுக்குச் சேதமேற்பட்டிருக்கிறது; இதுவரை நிவாரணத்திற்காக ரூ. 12 கோடி செலவிடப்பட்டிருக்கிறது" என்ற விவரங்களை மக்கள் சபையில் அமைச்சர் குல்சாரிலால் நந்தா வெளிப்படுத்தியுள்ளார்.

மருத்துவம்பற்றி ஏதும் அறியாதவர்கள்...

மருத்துவக் கல்விபற்றி ஆலோசனை கூறுவதா?

டெல்லி நியமித்த ஏழு மந்திரிகள் குழு பெரிய 'சாபக்கேடு' ஆகும்

டாக்டர் இலட்சுமணசாமி சாட்டை

மருத்துவம்பற்றி ஏதுமே அறியாதவர்களை மருத்துவ முறைகள் குறித்து ஆலோசனை கூறுமாறு கேட்டிருக்கும் டில்லியின் போக்கிற்கு, டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் நல்ல சாட்டை அடி தந்திருக்கிறார், கோவை கூட்டம் ஒன்றில் பேசுகையில்!

கோவை மாவட்ட மருத்துவச் சங்கத்தின் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

தரத்தைக் குறைக்கும்

"இணைக்கப்பட்ட மருத்துவ முறை என்று ஒரு முறையை உருவாக்குவதற்கு எந்தவித நியாயமும் கிடையாது. அது, மருத்துவக் கல்வி, தொழில் இவற்றின் தரத்தைக் குறைக்கும்.

"மருத்துவக் கல்வி பெறும் மாணவர்களால் நவீன முறையையும் பழைய இந்திய முறையையும் கற்றுக்கொள்ள முடியாது.

"ஆயுர்வேதம், யுனானி அல்லது சித்தவைத்திய முறைகளை ஊக்குவிக்க வேண்டுமானால், இந்த முறை வைத்தியத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், தேவையான தகுதிபடைத்தவர்களாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதே!

"நவீன கால வைத்திய முறை தான் சிறந்தது என்று நான் கூறவில்லை; அல்லது, ஆயுர்வேதம் போன்ற வைத்திய முறைகளுக்கு ஊக்கமளிக்கக்கூடாது என்றும் நான் கூறவில்லை.

"ஆனால் இரண்டு முறைகளையும் கலந்து உலவவிடுவது, முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாகும்.

'உயர்ந்த தரத்தைப் பாழ்படுத்தும் வகையில் சமீபகாலத்தில் சர்க்கார் சில நடவடிக்கைகளை வைத்தியத் துறையைப் பொறுத்து மேற்கொண்டிருப்பது கவலைக்கிடமாக உள்ளது.

சர்க்கார் தமது அதிகாரத்தைக்கொண்டு, எல்லாவற்றையும் தம்மிச்சையாகச் செய்கின்றனர்.

ஏதுமே அறியாதோர்!

"வைத்தியம்பற்றி ஏதுமே அறியாத ஏழு மந்திரிகளைக் கொண்ட குழு ஒன்றை டில்லி சர்க்கார், இந்திய வைத்திய முறைகள்பற்றி ஆராய்ந்து கூறுவதற்காக நியமித்துள்ளனர்.

"அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக இந்தக் குழு அமைக்கப்பட்டிருப்பது கண்டு நான் மிக வருந்துகிறேன்.

"மருத்துவத் தொழிலின் நலன்களைப் பேண விரும்பும் அனைவருக்கும், மருத்துவக் கல்வி குறித்து ஆராய அது பற்றி ஏதும் அறியதாவர்கள் நியமிக்கப்படுவது, பெரிய 'சாபக்கேடா'கவே தோன்றும்.

"இந்திய வைத்திய முறைகளை நான் எதிர்க்கிறேன் என்று எவரும் கருதக்கூடாது. நான் வற்புறுத்த விரும்புவதெல்லாம் அந்த முறைகளின் சரியான அபிவிருத்திக்கு, விஞ்ஞான ரீதியான, சாஸ்திர ரீதியான பின்னணி வேண்டுமென்பதேயாகும்."

சன. 9-ல் சர்க்கார் ஊழியர் வேலைநிறுத்தப்போராட்டம்

ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாக சர்க்கார் மிரட்டுகிறதாம்!

தஞ்சாவூர், டிச. 16—

டில்லி அரசாங்க ஊழியர்களைப்போலவே தங்களுக்கும் கிராக்கிப் படி முதலியன தரப்பட வேண்டும் என்பதுபோன்ற நியாயமான கோரிக்கைகளை சென்னை சர்க்கார் வரும் சனவரி 5-ந் தேதிக்குள் கவனிக்காவிட்டால், சனவரி 9-ந் தேதியன்று ஒரு மணி நேரம் அடையாள வேலைநிறுத்தம் செய்வோம் என்று போர்க்குரல் எழுப்பியுள்ள சென்னை சர்க்கார் ஊழியர்களை, சர்க்கார் மிரட்டுகிறதாம்! 'ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம்; சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்வோம்' என்று அச்சுறுத்துகிறதாம்!

சர்க்காரின் இத்தகைய மிரட்டல் கடிதம் ஒன்று தமக்குக் கிடைத்திருப்பதாக சங்கத் தலைவர் கண்ணன்குட்டி மேனன், தஞ்சை மாவட்ட சர்க்கார் ஊழியர் நாலாவது மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

நகரில் 4-இலட்சம் வாக்காளர் அதிகரிப்பு

சென்னை, டிச. 15—

1952-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் போது இருந்ததைவிட, இப்போது சென்னை நகரில் சுமார் 4 இலட்சம் பேர் அதிகமாக வாக்காளர்களாகியுள்ளனராம்!

சென்ற தேர்தலின்போது 5,75,144 வாக்காளர் இருந்தனர் என்றும், இப்போது 9,21,051 வாக்காளர் இருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது பெண் வாக்காளர் மட்டும் 4,25,023 பேர் உள்ளனர் என்றும், 1952-ல் 2,71,120 பெண்களே வாக்காளராக இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

புத்துணர்ச்சிபெற்று ஈடன் திரும்பியுள்ளாராம்!

ஓய்வெடுத்துக்கொண்டு ஜமைக்காவில் இருந்து பிரிட்டனுக்குத் திரும்பியுள்ள ஈடன் கூறியுள்ளதாவது:—

"புத்துணர்ச்சி பெற்று நான் திரும்பியிருக்கிறேன். எகிப்து விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்தது சரிதான் என்பதை சரித்திரம் உறுதிப்படுத்தும். கால தாமதம் எதுவும் இல்லாமல் சூயஸ் கால்வாயை சீர்ப்படுத்த வழிவகுக்க வேண்டியதே உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய வேலையாகும்."

முன்னாள், இந்நாள் முதன் மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி

மொழிவழி மகா குஜராத் கோரி ஆர்ப்பாட்டம்

பரோடா, டிச. 16—

மொழிவழி மகாகுஜராத் மாநிலம் அமைக்கக் கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இன்று, முன்னாள் பம்பாய் முதன் மந்திரியும் இப்போதைய மத்திய வர்த்தகத் தொழில் இலாகா மந்திரியுமான மொரார்ஜி தேசாய், மற்றும் பம்பாய் மாநில முதன் மந்திரியான ஒய். பி. சாவன் ஆகிய இருவரும் பரோடா வந்தபோது கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

பரோடா நகரசபை ரூ 4 இலட்சம் செலவில் எழுப்பியுள்ள நகர மண்டபத்தைத் திறந்துவைக்க 'சாபனேரிகவுனி'யிலிருந்து அவர்கள் இருவரும் வந்தபோது, வழி நெடுக மக்கள் கூடிநின்று கருப்புக் கொடிகளைக் காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர். மேலும், விமான நிலையத்திலிருந்து அவர்கள் நகருக்குள் வந்தபோதும் இந்த ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது.

விழாவின்போது!

திறப்பு விழாவில் அந்த இரு மந்திரிகளும் கலந்துகொண்டு பேசுகையிலும், மண்டபத்திற்கு வெளியில் கூடிநின்று ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

உபதேசம்!

'கலகக்காரர்களின் ஆட்சியை ஊக்குவித்து ஜனநாயக விசேஷங்களை அழிக்க நினைப்போருக்கு எதிராக, ஜனநாயகத்தைக் காப்பாற்றவேண்டும்,' என்று மக்களுக்கு அந்த மந்திரிகள் உபதேசம் புரிந்தனராம், கூட்டத்தில்!

குஜராத் எங்கும்!

மீண்டும் குஜராத் எங்கும் இப்போது, மொழிவழி மாநில எழுச்சி தோன்றியிருக்கிறது. ஆங்காங்கே மந்திரிகளுக்குக் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள் சிறப்பாகத் திட்டமிடப்பட்டு நடைபெறுகின்றன.

சுகாதாரத் திட்டங்களுக்கு டில்லி ஒதுக்கிய நிதி

மாநிலங்கள் உபயோகிக்காமல் திருப்பித் தந்துவிட்டனவாம்!

ராஞ்சி, டிச. 16—

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வந்த சுகாதாரத் திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை பல மாநிலங்கள் சரிவர உபயோகித்துக் கொள்ளாமல் அவற்றைத் திருப்பித் தந்துவிட்டன"

என்று, மத்திய சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்தகௌரி இங்கு நடைபெற்ற மத்திய சுகாதார கவுன்சில் 5-வது கூட்டத்தில் பேசும்போது கூறியிருக்கிறார்.

பொது விற்பனை வரிக்கு சென்னையில் திருத்தம்

சென்னை, டிச. 16—

சென்னை பொது விற்பனை வரி சட்டத்திற்கு சென்னை அரசாங்கம் ஒரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறது.

இப்போது தங்கம், வெள்ளி விற்பனைக்கு, மொத்த விற்பனையில் ரூ. 100-க்கு 4-அணா வீதம் ஒருமுனை வரி வசூலிக்கப்படுகிறது. இனி அது 8-அணாவாக உயருகிறது.

தென்னாப்பிரிக்காவில் கைது செய்யப்பட்டோர்!

'தேசத் துரோக நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்' என்று காரணம் காட்டி, இதுவரையில் 149 பேர் இங்கு கைது செய்யப்பட்டுள்ளனரல்லவா?

அவர்களில் 49 பேர் ஆப்பிரிக்கர்; 8 பேர் கலப்பு நிறத்தவர்; 17 பேர் இந்தியர்; 23 பேர் ஐரோப்பியர் என்று தெரிகிறது.

அமெரிக்காவுக்கு இந்திய 'இறால்' ஏற்றுமதியாகும்

இந்திய 'இறாலை' அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து, அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை கேரள மாநிலத்திலுள்ள கொல்லம் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்த இந்திய—நார்வே மீன் அபிவிருத்தித் திட்டக் குழு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

உலகம் முழுமையிலும் வினைச்சல் பெருகியதாலேயே மிளகு விலை குறைந்துவிட்டதாம்!

மக்கள் வரிப் பணம் பாழாவதைத் தடுக்கமுடியாதாம்!

எவ்வளவு பாழாகிறது என்பதையும் கணக்கிடுவது சுலபமல்லவாம்!

மக்கள் சபையில் மந்திரி ஒருவரின் திமிரான பதில்

புதுடில்லி, டிச 16—

"சர்க்கார் மேற்கொள்ளுகிற வர்த்தக சம்பந்தப்பட்ட அல்லது வேறெந்த நடவடிக்கைகள், திட்டங்கள் இவற்றில் பணம் பாழாவது என்பது தவிர்க்க முடியாதது.

"அப்படிப் பாழாகும் பணம் எவ்வளவு என்பதை—எத்தனை சதவிகிதம் என்பதைக் கணக்கிடுவது என்பது, மிகச் சிரமமானது

"அந்தவகையில், சமூக நல அபிவிருத்தித் திட்டத்திலும் பணம் பாழாகியிருக்க வேண்டும்; ஆனால், எவ்வளவு கொஞ்சமாகப் பாழாக்க முடியுமோ அவ்வளவுதான் பாழாக்கியிருப்போம்"

—என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் சமூக நல மந்திரி எஸ். கே. டே கூறியிருக்கிறார்.

நம் நாடு

சென்னை 17-12-'56 திங்கள்

சமரன் கட்டளைப்படி!

தேர்தல் 'கமிஷன்' சர்க்காரின் ஆணைக்குக் கட்டுப்படாத ஒரு சுயேச்சையான அங்கம் என்று அரசியல் சட்டம் கூறுவதை மிகப் பெருமையோடு, டில்லிப் பெரியவர்கள் கூரை ஏறி வான்கிழிபக் கூவுகின்றனர்.

ஆனால், அந்தத் தேர்தல் கமிஷன், உண்மையில் தன்னிச்சையாக இயங்கும் தன்மைத்தாயிருக்கிறதா என்பதில் ஆழமான சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் வகையில், அதன் சமீப காலத்தியப் போக்கு அமைந்திருக்கிறது.

கடந்த நான்கு திங்களுக்கு முன்பிருந்தே தேர்தல் தேதி நிர்ணயம் பற்றி, தேர்தல் கமிஷனின் தொடர்ச்சியான இரண்டு மூன்று அறிவிப்புகளை டில்லி பேரரசில் மந்திரிகளாயிருப்போர் மறுதலித்து வந்திருக்கின்றனர். இது குறித்துத் தேர்தல் கமிஷன் கவலைப்பட்டதாகத் தெரியக்காணோம்.

தேர்தல்கள் நடைபெறும் தேதி நிர்ணயம் சூறித்து, தொடர்புடைய சர்க்கார்களின் ஆலோசனைகளை கமிஷன் கருத்தில் கொள்ளவேண்டுமென்பது உண்மைதான். ஆனால், அந்த ஆலோசனைகளின் தாராதரத்தைப் பொறுத்து, கமிஷன் அதனை ஏற்றுக்கொண்டாலும் கொள்ளலாம்; அல்லது, நிராகரித்துவிட்டுத் தனக்குச் சரியென்றுபடுகிற தேதிகளில் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கலாம். இதற்குச் சுதந்திரம் இருந்தால்தான், ஆட்சியில் அமர்ந்திருப்போரின் விருப்பத்திற்கு வளைந்து கொடாமல், தமிழ்ச்சையாக இயங்கும் அதிகாரம் கொண்டது கமிஷன் என்பதில் அர்த்தமிருக்கமுடியும்.

தேர்தல் கமிஷன் தலைவர் இரண்டு மூன்று முறைகள் அறிவித்தத் தேர்தல் தேதிகளை டில்லி மந்திரிகள் பகுத்தறிந்து பேசியதற்கு, இதுவரையில் தொடர்புடைய எவரும் கமிஷனின் சுதந்திரத் தன்மை பற்றித் தோன்றக்கூடிய ஐயப்பாட்டினைப் போக்க வேனும் சரியான காரண விளக்கம் தரவில்லை.

பின்னர், கமிஷன் நிபாரிசு செய்த தேதிகளை—அதாவது 1957-ம் ஆண்டு பிப்ரவரி 25-ந் தேதி முதல் மார்ச்சு 12-ந் தேதிவரை தேர்தலுக்கான நாட்கள் என்பதை டில்லி ஏற்றுக் கொண்டுவிட்டதாகச் செய்தி வந்தது.

இதற்குப் பிறகு, பத்திரிகையாளரிடம் பேசிய தேர்தல் கமிஷன் தலைவர், தேர்தல் நடைபெறும் நாட்களாக—1957 பிப்ரவரி 25 முதல் மார்ச் 12-ந் தேதி வரையுள்ள நாட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காரணத்தை விளக்கியுள்ளார். அவர் காட்டியுள்ள காரணத்தை, 'இந்தியத் துணைக்கண்டத்தில் சேரு பண்டிதருக்குப் பின்னும் மக்கள் வாழுவர்; அவர்களுக்கும் ஒரு ஆட்சிதேவைதான்'—என்று கருதக்கூடியவர்கள் கட்டாயம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீடித்த நெடிய எதிர்காலத்தை உற்றுநோக்கி, ஓரளவேனும் அதனை உணரக்கூடிய தொலைநோக்குடையவர்கள், தேர்தல் கமிஷன் தலைவர் தரும் காரணத்தில் புதைந்து கிடக்கும் சில கசப்பான உண்மைகளை உணரத் தவறமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

"'ஹோலி' பண்டிகை மார்ச் 15-ந் தேதியன்று வருகிறது. மக்கள் அனைவரையும் பொறுத்த தேர்தல்கள், ஹோலி பண்டிகைக்கு முன் நடத்தப்பட வேண்டும் என்று உத்தர பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்கள் என்னை எச்சரித்துள்ளன; எனவேதான், பிப்ரவரி 25-க்கும் மார்ச் 12-க்குமிடையே தேர்தல் தேதிகள் நிர்ணயிக்கப்பட்டன"

என்று, தேர்தல் கமிஷன் தலைவர் சென்னை கூறியுள்ளார்.

இந்த வாசகங்கள், 'தேர்தல் கமிஷன் என்ன, உ. பி., பீகார் மாநிலங்களின்கைப்பாவையா?'—என்று கேட்பதற்குப் பொருமானவையாக இருக்கின்றன அல்லவா?

'மக்கள் அனைவரையும் பொறுத்த தேர்தல்' என்றால், உ. பி., பீகார் மாநிலங்களைத் தவிர இதர மாநிலங்களில் வாழுபவர்கள் எல்லாம் மக்கள் இல்லையா? இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் அனைவருக்கும் சேர்த்து, ஒன்றுகக் குரல் கொடுப்பதற்கு, உ. பி., பீகார் மாநிலங்கள் எப்போது, எவரிடமிருந்து அதிகாரமும் அனுமதியும் பெற்றன?

இந்த மாநிலங்கள், 'ஹோலி பண்டிகைக்காக, தேர்தலை இந்தத் தேதிகளில் வைத்துக்கொள்ளுங்கள்,' என்று கேட்டுக்கொள்ளக்கூட இல்லையாம்! 'எச்சரித்தன' என்கிறார், கமிஷன் தலைவர்!

கமிஷன், இரு வடநாட்டு மாநிலங்களின் எச்சரிக்கைக்காக ஒரு முடிவை மேற்கொண்டிருக்கிறது என்றால் இதனை, 'சுயேச்சையாக இயங்கும் அங்கம்' என்று எந்த மதிபடைத்த அரசியல் வாதியும் கொள்ள முடியாதே!

இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்குமான பொதுத் தேர்தல்கள், உ. பி., பீகார் மாநிலங்களின் சௌகரியத்திற் கொப்பத்தான் நடைபெறுமா என்பதில் உள்ள 'நேர்மை' சீர்தூக்கிப் பார்க்கத்தக்கது. இந்தியத் துணைக் கண்டத்தின் எதிர்காலம் பற்றிக் கவலைப்படுபவர்கள், தேர்தல் கமிஷன் மட்டுமல்ல — பொதுவாக எல்லா நிறுவனங்களுமே உ. பி., பீகார் போன்ற வடநாட்டு மாநிலங்களின் அல்லது அவர்களின் எகப்பிரதிநிதியான பண்டிதரின் விருப்பத்திற்கொப்பவே செயல்பட்டு வருகின்றன என்ற கசப்பான உண்மையை உணர்ந்தாக வேண்டும்.

இரு மாநில சர்க்கார்கள், 'சுயேச்சையான தேர்தல் கமிஷன்' என்ற அங்கத்தை எச்சரிக்கிற 'துணிவு' பெற்றிருப்பது எதனால் என்பதும்

ரூ. 553 கோடி!

உலக பாங்கியிடம் இந்தியா கடன் கேட்கிறது

புதுடில்லி, டிச. 14—

இரயில்வேக்கள், தரைமூலங்கள், கப்பல் போக்குவரத்து ஆகியவற்றின் அபிவிருத்திக்கும் கொயனா, நிகாண்டு மின்சாரத் திட்டங்களுக்கும், பம்பாயிலுள்ள டிராம்பே எண்ணெய்த் தொழிற்சாலை அபிவிருத்திக்கும் ரூ. 553 கோடி உதவியளிக்க வேண்டுமென்று இந்தியப் பேரரசு உலக பாங்கியிடம் கடன் கேட்டிருப்பதாகத் தெரிகிறது

இரண்டாவது திட்ட காலத்தில் இரயில்வேயின் அபிவிருத்திக்காக ரூ. 425 கோடி கோரப்பட்டுள்ளது.

கொயனா திட்டத்திற்கு ரூ - 2 50,00,000; நிகாண்டு திட்டத்திற்கு ரூ. 15 கோடி; டிராம்பே எண்ணெய்த் தொழிற்சாலைக்கு ரூ. 3,75,00 000; கப்பல் அபிவிருத்திக்காக ரூ. 51 கோடி; தரைமூலங்கள் அபிவிருத்திக்கு 22 கோடி; தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்திற்கு ரூ 14 - கோடி; இரும்பு உருக்கிற்கு ரூ. 5 50,00,000 - ஆகக் கோரப்பட்டிருக்கிறது.

இந்தியப் பேரரசு இவ்வளவு பெரிய தொகையைக் கடனுப் பெற்றாலும், இரண்டாவது திட்டத்தில் அயல் நாட்டுச் செலாவணியில் ரூ. 280 கோடி பற்றாக் குறை ஏற்படுமாம்.

இதுவரையில் உலக பாங்கி இந்தியாவுக்கு ரூ. 110 கோடி உதவியளித்துள்ளது.

உலக பாங்கி எந்த நாட்டிற்கும் அதிகப்படியாக உதவியளிக்கக் கூடிய வரம்பு ரூ. 26 கோடி டாலராகும்; ஆனால் அதிகப் படியான உதவியளிப்பதற்குத் தடை ஏதுமில்லையாதாம்.

தடுப்பக் கட்டுப்பாடுத் திட்டம் அமுலாகும்

ரூ. 30-இலட்சம் ஒதுக்கல்

புதுடில்லி, டிச. 14—

1956-57-ம் ஆண்டில் இந்தியா முழுமையிலும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல் நடத்த ரூ. 30-இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் சுகாதார அமைச்சர் தெரிவித்தனார்.

தரவேண்டிய கடனை பாக். தீர்த்துவிடுமாம்

அமைச்சரின் நம்பிக்கை

புதுடில்லி, டிச. 14—

'கால்வாய்த் தண்ணீர் விவியோகத்திற்காக இந்திய அரசாங்கத்திற்குத் தரவேண்டிய ரூ. 76 இலட்சத்தை பாகிஸ்தான் திருத்தி வைத்திருக்கிறது,' என்று மக்கள் சபையில் உதவித் திட்ட அமைச்சர் மிஸ்ரா கூறியுள்ளார்.

இதே சமயத்தில் பாகிஸ்தான் ரூ. 48,45,000 வேறு பாக்கித் தரவேண்டியுள்ளதாம். இந்தத் தொகையைப் பாகிஸ்தான் சுமுகமாகத் தீர்த்துவிடும் என்ற நம்பிக்கையிருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

'அகில இந்தியா'க்கள் கவலையோடு சிந்திக்கவேண்டிய ஒன்றாகும்.

எப்போது நடைபெற்றாலும் தயாராகவே இருக்கிற தி. மு. கழகத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிகள் பற்றிக் கவலை இல்லை. ஆனால், தேதி நிர்ணயிக்கப்பட்ட முறையும், அதில் அடங்கிக்கிடக்கும் ஆபத்தும்தான் கவலை தருகின்றன.

'எல்லாம் அந்த நேரு எஜமான் கட்டளைப்படி,' என்றிருக்கும் நிலைமை, நிச்சயம் ஆபத்தானது என்பதில் எவருக்கும் சந்தேகமிருக்க முடியாது.

தேயிலை அதிகமாகச் செலவாகிறதாம்!

இந்திய மக்களின் தேவை துரித அளவில் அதிகரிக்கிறதாம்

கல்கத்தா, டிச. 15—

தற்போது இந்தியாவில் உற்பத்தியாகும் தேயிலை பெரும்பாலும் வெளிநாடுகளின் தேவைகளுக்காக எற்றுமதி செய்யப்படுகிறது.

1954—55-ம் ஆண்டில் இந்திய மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய 17 கோடி இராத்தல் தேயிலை தேவைப்பட்டது.

1955—56-ம் ஆண்டில் இந்திய மக்களின் தேவை 4 கோடி இராத்தலாக அதிகரித்துள்ளது.

இந்தியாவிலேயே இதுவரையில் இவ்வளவு அதிகமான தேயிலை முன் ஆண்டுகளில் தேவைப்படவில்லை

இந்திய மக்களுக்கு இந்த அளவில் தேயிலை தேவைப்படுமானால், எதிர்காலத்தில் தேயிலை எற்றுமதியைக் குறைக்க வேண்டும் அல்லது உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று அஞ்சுகின்றனர்.

'இந்தியாவில் உற்பத்தியாகும் தேயிலையில் 50 சதவிகிதத்திற்கு மேல் இந்தியாவிலேயே செலவாகும்' என்று கருதுவதாகத் தேயிலை சங்கத் தலைவர் ஷா கூறியுள்ளார்.

ஆண்களே தாழ்த்தப்பட்டவர்களாம்!

சென்னை, டிச. 14—

'சமூக சேவையைப் பொறுத்தவரை ஆண்கள்தான் தாழ்த்தப்பட்டவர்கள்,' என்று நீதி மன்றி சுப்பிரமணியம் கூறினாராம்!

இந்திய சமூக சேவைக் கழகத்தின் சென்னைக் கிளைத் தலைவர் என்ற முறையில் அவர் மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசும்போது, 'சமூக சேவையில், தாழ்த்தப்பட்டவர்களான ஆண்களின் சார்பில் நான் பிரதிநிதிகளை வரவேற்கிறேன்,' என்று அவர் கூறியபோது சிரிப்புக்கிளம்பியதாம்!

மதுரை—கோவை நேர் டிரங்க் டெலிபோன்!

புதுடில்லி, டிச. 13—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தபால் தந்தி இலாகா அபிவிருத்தித் திட்டத்தில் மதுரையையும்—கோவையையும் நேர் டிரங்க் டெலிபோன்மூலம் இணைப்பதென உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்

தற்போது மதுரைக்கும்—கோவைக்கும் இடையே டெலிபோன் இணைப்பு சுற்றி வளைத்துக் கொண்டு செல்கிறது; இதனால் சில சமயங்களில் தாமதம் ஏற்படுகிறது.

உங்கள் குறிப்புக்கு!

தஞ்சை, டிச. 14—

சிறிய கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 400 மதிப்புள்ள கருவிகளை மானியமாகத் தருவதற்கு சென்னை மாநிலத்தில் ரூ. 1½ இலட்சம் வழங்க மத்திய அரசாங்கம் அனுமதித்துள்ளதாகவும், அதன்கீழ் தஞ்சை மாவட்டத்தில் 24 பேர்களுக்கு ரூ. 10,560 தரப்படும் என்றும் தஞ்சை மாவட்ட கலெக்டர் வி. கார்த்திகேயன் சிருபர்களிடம் கூறியுள்ளார்.

முன்னேறுகிறார்கள்!

புதுடில்லி, டிச. 14—

இந்திய இரயில்வேக்களில் இணைக்கப்பட்டுள்ள குளிர் சாதன இரயில் பெட்டிகளில் பிரயாணம் செய்பவர்களுக்கு வசதியாகக் கூஜாவில் தண்ணீரும், கண்ணாடிக் குவளையும், ஒரு மேல் துண்டும் தரப்படுமாம். இது நடைமுறைக்கு வர இன்னும் சிறிது நாளாகுமென்று இரயில்வே போர்டு அறிவித்திருக்கிறது.

மாணவர்கள் ஒழுக்கம்

பல்கலைக் கழகங்களின் கடமை பற்றி ஜான் மத்தாய்

பூனா, டிச. 13—

"மாணவர்களிடையே ஒழுக்கம் குறைந்து வருவதாகக் கூறப்படுவது தவருனதாகும்; மிகைப்படுத்திக் கூறுவதாகும்; அக்கால மாணவர்களைவிட இக்கால மாணவர்களிடை சுயமரியாதையும் பொறுப்புணர்ச்சியும் அதிகமாகவே இருக்கிறது.

"இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் மாணவர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதில் தவறியதில்லை.

"பிறருடைய உரிமைகளை மதிப்பதில்தான் நல்ல சனநாயகம் வளருவதற்கு வழியுண்டு; எனவே, மாணவர்களை ஒழுக்கத்துடன் கூடிய சுதந்திரக் குடிமக்களாக்குவதற்கு பல்கலைக் கழகங்கள் செயலாற்ற முனைய வேண்டும்"

என்று, பம்பாய் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஜான் மத்தாய் பெர்கூசன் கல்லூரியில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

தியாகிகள் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம்

மக்கள் சபையில் மசோதா

புதுடில்லி. டிச 14—

'அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கவேண்டும்,' என்று கோரி, மக்கள் சபையில் ஒரு தனி நபரின் மசோதா விவாதத்திற்கு வந்துள்ளது.

எவ்வித வேற்றுமையுமின்றி எல்லாக் கட்சியினருக்கும் சலுகை தரப்படவேண்டும் என்றும், தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் ஆகியோருக்கு அளிக்கப்படும் சலுகைகளும் தியாகிகளுக்குத் தரப்பட வேண்டும் என்றும், அரசியல் தியாகிகளின் நிலையைக் கண்டறிய ஒரு கமிட்டியை ஏற்படுத்தவேண்டும் என்றும் விவாதத்தின்போது கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

அனைத்து விடுதிகளுக்கும் 'லைசென்ஸ்' தர மசோதா

மக்கள் சபையில் நிறைவேற்றம்

புதுடில்லி, டிச 14—

அனைத்துக் குழந்தைகள், பெண்கள் விடுதிகளை ஒழுங்குபடுத்தும் முறையில் 'லைசென்ஸ்' வழங்கப்படவேண்டும்' என்ற மசோதா மக்கள் சபையில் நிறைவேறியுள்ளது.

மேற்படி விடுதிகளின் பெயரால் மோசடிகள் நடப்பதை அறிந்தவுடன், அரசாங்கம் விடுதியை மூடிவிடாமல் தன்னுடைய பொறுப்பில் ஏற்றுத் திறம்பட நடத்தவேண்டும் என்றும், விடுதியில் பெண்களுக்குக் கல்வி போதனை அளிக்கவேண்டும் என்றும் வெளி நாட்டு இலாகா அமைச்சரின் செயலாளர் திலட்சுமி மேனன் விவாதத்தின்போது கூறியுள்ளார்.

இரயில்வே கார்டுகளிடம் 'முறையீடு புத்தகம்'

கல்கத்தா, டிச 12—

தென் கிழக்கு இரயில்வே கிறுவனத்தில் பொது மக்கள் தங்கள் குறைகளை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவும், இலஞ்சம் முதலிய ஊழல்களை ஒழிக்கவும் ஒரு புது முறையைப் புகுத்தியுள்ளனர்.

இதற்காக இரயில்வே காவலர்களிடம் 'முறையீடு புத்தகம்' ஒன்று கொடுக்கப்படுமென்றும், அப்புத்தகத்தில் பொது மக்கள் தங்களுக்குள்ள குறைகளை எழுதலாம் என்றும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய தஞ்சையில் 6 விதைப் பண்ணைகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தஞ்சை மாவட்ட கலெக்டர் அறிவித்துள்ளார்.

'நான் இந்துமதத்தை கைவிட்டாலும் அது என்னை விடாது'

'ஆகவே சாகும்போது இந்துவாகச் சாகமாட்டேன்'

இப்படிக் கூறிவிட்டுத்தான் பௌத்தரானர் அம்பேத்கார்

அனுதாபக் கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன்

டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், சென்னையில் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரையின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

"டாக்டர் அம்பேத்கார், இந்தியாவில், தனிப்பட்ட பெரிய தலைவர்கள் வைத்திருந்த இருவரில் ஒருவராவார்; மற்றவர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் ஆவார்.

"டாக்டர் அம்பேத்காரைப் போன்ற படித்தவர்கள் பலர் இருக்கலாம்; ஆனால் அவர்களது படிப்பெல்லாம் எவருக்கும் பயன் படாது; மிகச் சிலர்தான், படித்தனவற்றை ஆராய்ந்து, தெளிந்து, தெளிவாகப் பிறருக்குப் பயன்படும் வண்ணம் எடுத்துரைப்பர்.

"அம்பேத்காரின் நுண்ணறிவுக்குச் சான்று வேண்டுமானால், அவர் எழுதிய 'பாகிஸ்தான்' என்ற புத்தகம் ஒன்று போதும்! அந்தப் புத்தகம், ஜின்னாவின் மாளிகைக்குக் காந்தியார் சென்று பாகிஸ்தான் பற்றி வாதாடுகையில், இருவரது கரத்திலும் திகழ்ந்ததாம். இருவரும், 'பாகிஸ்தான் வேண்டும்-வேண்டாம்' என்பதற்கான ஆதாரங்களை அதிலிருந்தே எடுத்துரைத்தனராம். பாகிஸ்தான் அமைவதால் ஏற்படக்கூடிய சாதகபாதகங்களை, அந்தளவு தெளிவாக டாக்டர் அம்பேத்கார் எடுத்துரைத்திருக்கிறார், அந்தப் புத்தகத்தில்!

பௌத்தரானர்

"நான் சாவதற்குள், இந்துவாகச் சாகமாட்டேன்; நான் எத்தனைதான் பகுத்தறிவுவாதியாக இருந்தாலும், எத்தனைதான் இந்து மதத்தை வெறுத்து ஒதுக்கினாலும், நான் இந்துவல்ல என்று கூறிக் கைகழுவினாலும், நான் இந்து மதத்தை விட்டுவிட்டாலும் இந்து மதம் என்னை விடாது; என் பிணத்தை 'சண்டாளன் பிணம்—தீண்டப்படாதவன் பிணம்' என்று ஏசும்; பழிக்கும். எனவே, 'நான் சாகும்போது இந்துவாகச் சாகமாட்டேன்' என்று கூறினார். அதன்படியே இறப்பதற்கு இரண்டு நிமிஷங்களுக்கு முன்னால், நாகபுரியில், குடும்பத்தோடு பௌத்தரானர். தன்னோடு இலட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களையும் சேர்த்துகொண்டு பௌத்தரானர்.

"தான் புத்தமதத்தைத் தழுவுவதற்கான காரணம் பற்றி அவர் விளக்குகையில், 'இன்னும் உயர்ந்த சாதிக்காரரிடத்தில் மனமாற்றம் ஏற்படவில்லை; நான் எத்தனை நாகரீகமானவனாக — படித்தவனாக —சுகாதாரமான வாழ்க்கை நடத்துபவனாக இருந்தாலும், என்னை மதிக்க—என்னோடு ஒன்றிப் பழக உயர்ந்த சாதிக்காரர்களுக்கு மனம் வருவதில்லை,'—என்று குறிப்பிட்டார்.

"அவர் சிறந்த பகுத்தறிவுவாதியாயிருந்தும், புத்தமதத்தைத் தழுவியதற்குக் காரணம் அதுதான்!

"இருக்கிற மதங்களில் எல்லாம் ஆண்டவனைப் பற்றி அதிகம் கவலைப்படாத, மோட்சமாரகத்தைப் பற்றிக் கவலைப்படாத ஒரு மதமாக புத்தமதம் இருப்பதால் அதனைத் தழுவினர்.

"அம்பேத்கார் தான் பெற்றிருந்த அரசியல் — பொருளாதார— சட்டத்துறை அறிவையும் ஆற்றலையும், பொதுவாக எல்லா மக்களுக்கும்—குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குமாகச் செலவிட்டார். வெள்ளையர் காலத்திலும் பண்டிதர் காலத்திலும், டில்லியில் மந்திரியாக இருந்திருக்கிறார்.

"அரசியல் சட்ட உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்தார்.

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சில பல உரிமைகளை, அரசியல் சட்டத்தின் மூலம் பெற்றுத் தந்திருக்கிறார்.

"தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவராக விளங்கிப் பணியாற்றினர்.

"அவரது மறைவு பெரும் நஷ்டம்; அவர் விட்டுச்சென்ற பணியை, தனியாக இயலாவிடினும் நம்மில் பலர் சேர்ந்தேனும் தொடர்ந்து செய்வதே அம்பேத்காருக்கு நாம் செய்யக்கூடிய இறுதி மரியாதையாகும்."

'தமிழகம்'

1957 ஜனவரித் திங்கள்முதல் தோழர் பி. எஸ். கோவிந்தசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'தமிழகம்' திங்கள் இருமுறை ஏடு வெளிவருகிறது. தனிப் பிரதி அணா 2; ஆண்டுச் சந்தா ரூ. 3. முன்பணம் கட்டும் விற்பனையாளர் விண்ணப்பிக்க விவரங்கட்கு: கிர்வாகி, 'தமிழகம்' குடி அரசு நிலையம், பம்பாய் 17.

பீடித் தொழிலாளர் போராட்ட

சட்டசபைமுன் டிசம்பர் 20-ல் மறியல் செய்வார்களாம்

விருதம்பட்டு, டிச. 14—பீடித் தொழிலாளர் நலனுக்கென ஒரு சட்டம் கொண்டுவரப் போவதாகக்கூறி, இன்றுவரை அதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் காலங்கடத்திவரும் சென்னை சர்க்காரின் போக்கினைக் கண்டிக்கும் வகையில் இத்திங்கள் 20-ந் தேதியன்று சென்னை சட்டசபைமுன் நடைபெறும் பீடித் தொழிலாளர் மறியலில், வேலூரிலிருந்து ஊர்வலமாகவந்து கலந்து கொள்ளுவதென இங்கு, சென்ற 9-ந் தேதியன்று நடைபெற்ற வடஆற்காடு மாவட்ட விருதம்பட்டு பீடித் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அக்கூட்டத்தில் சர்வகட்சிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். கூட்டத்திற்குத் தோழர் வி எம். முனுசாமி (காங்.) தலைமை வகித்திருக்கிறார். தோழர் கே. ஆர் சுந்தரம் (கம்), மேற்படி சங்கச் செயலரைத் தொடர்ந்து வைத்தார்.

தோழர்கள் கே. வி. அப்பாசாமி (பி சோ.), எம். கிருஷ்ணசாமி (பெடரேஷன்), ந. திருஷ்ணன் (தி. க.), திராவிடமணி ஆகியோர் சங்க வளர்ச்சி குறித்துக் கருத்துரை வழங்கினர்.

டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கும், அரியலூர் ரயில் விபத்தில் மாண்டோர் குடும்பத்தாருக்கும் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (த-தி.)

தெரிந்துகொள்ளுங்கள்

1955—56,ம் ஆண்டில், இந்தியாவில், மொத்தம் ரூ. 19 94,00,000 பெறுமானமுள்ள மின்சார இயந்திர சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.



டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சடலம் பொதுமக்களின் பார்வைக்கென 'இராசகிரக'த்தில் வைக்கப்பட்டிருக்கிறது. தாய்மார்கள் பல்லாயிரக்கணக்கில் கூடியிருப்பதைப் படத்தில் காணலாம்

—படம் அனுப்பியது :—பம்பாய் தி. மு. கழகம்

★

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சடலம், பொதுமக்களின் பார்வைக்கு அன்னாரின் இல்லமான 'இராசகிரக'த்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

★

மேலே : மலர்க் குவியலுக்கிடையே அம்பேத்கார் அவர்களின் சடலம்—பொதுமக்கள் நிரளாக வந்து கண்டுசெல்லும் காட்சி.
கீழே : அம்பேத்கார் அவர்களின் சடலத்தைக் காண இலட்சக்கணக்கான மக்கள் வரிசையாகக் காத்து நிற்கும் காட்சி.

—படம் அனுப்பியது :—பம்பாய் தி. மு. கழகம்

தமிழ் மாவட்டங்களுக்கு அம்பேத்கார் 'அஸ்தி'

த. நா. தா. சம்மேளனம் முயற்சி

சென்னை, டிச. 15—மறைந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களது அஸ்தியை, இம்மாத முடிவிற்குள்ளாகப் பம்பாயிலிருந்து எடுத்து வந்து தமிழ் நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும், மைசூர் மாநிலத்தில் தக்ஷயல், பெங்களூர் முதலிய இடங்களுக்கும் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளனைத்தையும் தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த ஏற்பாடு குறித்தும், எதிர்கால சம்மேளன வேலைகள் போன்ற பிரசினைகள் குறித்தும் ஆராய்ந்து முடிவெடுக்க, வருகிற 23-ந் தேதியன்று சென்னையில் தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் விசேடக் குழுக் கூட்டம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்தமானில் 1,405 இந்தியக் குடும்பங்கள்!

சில தகவல்கள்

1956 நவம்பர் 30-ந் தேதிவரை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து மொத்தம் 1,405 இந்தியக் குடும்பங்கள் அந்தமானில் குடியமர்த்தப்பட்டுள்ளதாக மக்கள் சபையில் உணவுத்துறை அமைச்சர் தத்தார் தெரிவித்துள்ளார்.

சென்னையிலிருந்து 4 குடும்பங்களும், கோவாவிலிருந்து 114 குடும்பங்களும், பர்மாவிலிருந்து 5 குடும்பங்களும், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய 1,282 குடும்பங்களும் இங்கு வந்துள்ளனவாம்.

இந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் வீடுகள் கட்டிக்கொள்வதற்கும், எருதுகள், பாத்திரங்கள், உரம், விதை தானியங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும் ஏற்படும் செலவுகளுக்கு ரூ 1730 கடன் உதவியாகத் தரப்பட்டிருக்கிறது; அத்தொகை திரும்பப் பெறப்படும்.

அறுவடை கிடைக்கும்வரையில் குடும்பச் செலவுக்காகவும், கப்பல் போக்கு-வரத்துச் செலவுகளுக்குமாக ரூ. 1,050 ன்கொடை வழங்கப்படுகிறதாம்.

தேர்தல் நிதி தாரீர்!

★

		ரூ. அ.பை
வரவு:		
முன் (15—12—56) இதழ்ப்படி	....	8,810—4—9
திராவிட முன்னேற்றக் கழகப் நாமக்கல் என். பி. செல்லப்பன் மூலம்	....	50—0—0
திராவிட முன்னேற்றக் கழகம்-ஆத்தூர் கே. எஸ். மணி மூலம்	....	6—4—0
பி. கருப்பையா-மேட்டுநீரேத்தான்	....	10—10—0
பி. சிவலிங்கம்-ரங்கூன்	....	10—0—0
கே. எஸ். அப்துல்-அக்காரபாளையம் ஆரணி வட்டம்	....	25—1—0
ஏ. இ. முகம்மத் ஷெரீப்-கொண்டம்பட்டி	....	1—8—0
ஏ. எஸ். மூர்த்தி-பெரியநாயகன்பாளையம்	....	5—0—0
என். சண்முகானந்தன்-சிங்கப்பூர்	....	80—0—0
இலக்குமணன்-வால்பாறை	....	20—0—0
எம். மல்லய்யா-பின்னி மில்ஸ்	....	15—8—0
என். இராமலிங்கம்-சிதம்பரம்	....	3—0—0
சோம. சண்முகம்-சங்கரன்கோயில்	....	2—0—0
அருணை நிலையம்-சங்கரன்கோயில்	....	1—0—0
மா. பாண்டியன்-மதுரை	....	1—0—0
கே. சந்தானம் தி. மு. கழகம்-கூத்தூர்	...	8—0—0
ஆக மொத்தம் ரூ		9,048—3—9

குறிப்பு:—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

இந்த ஆண்டில்!

★

அண்ணா, ஈ. வெ. கி. சம்பத்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் நடிக்கும்

சந்திரமோகன்

10—1—57 மாலை 6-மணிக்கு

★

* பிரபல நாடகங்கள்
* சிறந்த நடனங்கள்
* ரேக்ளா பந்தயங்கள்
* இலவச துணைக்காட்சிகள்
* கதம்ப நிகழ்ச்சிகள்
* தேர்ந்த ஆட்டங்கள்
* கவர்ச்சிகரமான விளையாட்டுப் பந்தயங்கள்
* கலைக்காட்சிகள் — இத்தனையும்

பார்க்பேர் — கண்காட்சியில் உண்டு

★

எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

23—12—56-ல் துவக்கம்

கண்காட்சியில் பணியாற்றப் பெண்கள் தேவை

எம். எஸ். மோகன்—காண்ட்ராக்டர்

கேரளத்தில் கைத்தறித் துணிகள் தேக்கம்!

நெசவாளரிடை வேலையில்லாத் திண்டாட்டம் தலைதூக்குகிறது?

கோழிக்கோடு, டிச. 16—கேரள மாநிலத்தில் மலபார்-கோழிக்கோடு பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் ரூ 10-இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேக்கிக்கிடக்கிறதாம்!

இந்த சரக்குகளை விற்பனை செய்ய மத்திய நிறுவனம் ஒன்று இல்லாததும், கைத்தறித் துணிகளுக்கு இப்போது தேவையில்லாததுமே இதற்கு முக்கிய காரணம் என்று தெரியவருகிறது.

மலபார் பகுதிகளிலுள்ள 28 சென்னை மாநில கைத்தறிக் கூட்டுறவுச் சங்கக்கிடங்குகளை இன்னும் கேரள கைத்தறி சொசைட்டிகள் சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையாம். இதனால் விற்பனை மந்தம் ஏற்பட்டுள்ளதாம்.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பல மூடிக்கிடக்கின்றனவாம்; இவைகளில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கென தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்குப் பல திட்டங்களை சொசைட்டிகள் சமர்ப்பித்துங்கூட, இதுவரையில் எந்த நடவடிக்கைகளும் ஆட்சியாளரால் மேற்கொள்ளப்படவில்லை.

தாணூர், பரப்பனங்காடி முதலிய பகுதிகளில் கைத்தறி சொசைட்டிகளிடை வேலையின்மை வெகு தீவிரமாகப் பரவி வருவதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

கரூர்:
மோட்டார் நிலைய மைதானத்தில்
18—12—56 இரவு 7-மணிக்கு
தலைவர்: இரா. வைரப்பெருமாள்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
என். ஆர். இராமசாமி
கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

★

தேனி:
பகவதியம்மன் கோவில் திடலில்
19—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: எஸ். முத்து
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
வி. வி. குருசாமி
என். இராமசாமி

3,195 குழாய்க் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டதாம்

தொழில் நுட்ப ஒத்துழைப்பு நிறுவன வேலைத் திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்படவேண்டிய 2 650 குழாய்க் கிணறுகளில் 2 644-ம், உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவேண்டிய 700 குழாய்க் கிணறுகளில் 551-ம், 1956 அக்டோபர் மாதம் வரையில் நிர்மாணிக்கப்பட்டன என்று, மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

சென்னை சிமென்ட் குரூப்

கம்பெனி தி. மு. க. தேர்தல் நிதிக் குழு உறுப்பினர்கட்கு:

"20-12-56ல் சென்னை நேப்பியர் பார்க்கில் நடைபெறவிருக்கும் தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்புக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொள்ள ஒப்புதல் தந்துள்ளார். எனவே இதுவரை நிதி தராத தோழர்கள் அனைவரும் உடனே சென்னை 29-வது வட்டக் கழகத்தில் நிதி செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டுகிறேன்"

என்று சென்னை சிமென்ட் குரூப் கம்பெனி தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழுத் தலைச் செயலாளர் எம். ஏ. கரிகாலன் அறிவிக்கிறார்.

சனவரித் திங்கள் சம்பளம்பெற டில்லி அரசாங்க ஊழியர் மறுப்பர்?

நிர்ப நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்படுமாம்

கல்கத்தா, டிச. 16—'சனவரித் திங்கள் 2-ந் தேதி அன்று அரசாங்க ஊழியர்கள் சம்பளம் பெறக்கூடாது' என்று, மத்திய அரசாங்க ஊழியர்கள் மாநாடு முடிவு செய்துள்ளதாம்.

உடனடியாகச் சம்பள நிர்ணயக் குழு அமைக்காமலிருப்பதையும், 'பஞ்சப் படி' விஷயமாக அரசாங்கம் செவிசாய்க்காமலிருப்பதையும் அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதாம்.

ஒன்பது ஆண்டுகளுக்குமுன் அரசாங்கம் நியமித்த முதல் சம்பள நிர்ணயக் குழு அளித்த பொறிசுகளே திருப்திகரமானதல்லவென்றும், அந்தச் சொறிசுகளைக்கூட அரசாங்கம் இதுவரை அமுல் செய்யவில்லையென்றும் கூறப்பட்டிருக்கிறது.

'தற்போது வாழ்க்கைத் தரப்புள்ளி 20 சதவிகிதம் உயர்ந்திருந்தும்கூட, அரசாங்கம், 'பஞ்சப் படி'யில் ரூ. 5 மட்டுமே உயர்த்தியிருக்கிறது; தற்போதுள்ள நிலையில் ரூ. 20 அதிகப்படியான பஞ்சப் படி அளிக்க வேண்டியதே நியாயமானதாகும்' என்றும் தொழிலாளர்களின் குறைகளை எடுத்துரைக்கவே இந்தப் போராட்டம் நடத்தப்படுகிறது என்றும் அரசாங்கத்தின் போக்கில் மாறுதல் ஏதும் காணவிட்டால், பணிமறுப்பு வேலை நிறுத்தம், அடையான வேலை நிறுத்தம் போன்ற தீவிர நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்றும் முக்கியஸ்தர் ஒருவர் கூறியுள்ளாராம்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பினர் நாட்டில் தொழிற் சங்க உரிமைகள் பறிக்கப்பட்டுவருவதாகவும் அவர் டில்லிப் போரின் மீது குற்றம் சாட்டியுள்ளாராம்.

உலகிலேயே மிகப் பெரிய அணுசக்தி மின்சார உற்பத்தி நிலையம்!

லண்டன், டிச. 13—உலகத்திலேயே மிகப்பெரிய அணுசக்தி மின்சார உற்பத்தி நிலையம் ஸ்காட்லாந்தில் ஏற்படுத்தப்படுகிறது. இது 3,60 000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யுமாம். இதனால் 10 இலட்சம் டன் நிலக்கரி மிகுதியாகுமாம்.

இந்த அணு உலைகளின் இயந்திரத்தின் எடை 70,000 டன்கள் என்று தெரிகிறது.

செக்கோஸ்லோவேக்கிய கலாச்சாரத் தூதுக்குழு

இந்திய சர்க்காரின் அழைப்பின் பேரில், பிரபல விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், இசை விற்பன்னர்கள், நாகலாசிரியர்கள், கலைஞர்கள், கேளிக்கை சித்திரக்காரர்கள், பொம்மலாட்ட சினிமாப் படவிற்பன்னர்கள் ஆகியோரடங்கிய கலாச்சாரத் தூதுக்குழு ஒன்று செகோஸ்லோவேக்கியாவிலிருந்து நேற்று புதுடில்லி வந்து சேர்ந்துள்ளது; மொத்தம் 12 பேரடங்கிய இக்குழுவினர் மூன்று வார காலம் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்வர்.

வரி தராது ஏமாற்றுவோர் ஏராளம்!

சர்க்காரின் கையாலாகாத்தனத்தை ஒப்புகிறார் டில்லி நிதி மந்திரி

புதுடில்லி, நவ. 12—

வரி கொடாமல் ஏமாற்றும் பழக்கம் வெகுவாக நிலவுவதாகக்கூறி சர்க்காரின் கையாலாகாத்தனத்தை ஒப்பியிருக்கிறார், நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி!

குற்றவாளிகள் எவர் என்று தனக்குத் தெரியும் என்றும், ஆனால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கச் சட்டம் இடம் தரவில்லை என்றும் நெஞ்சுரத்தோடு வெட்கமின்றிக் கூறியிருக்கிறார், மக்கள் சபையில் அந்த மந்திரி!

"சிலர் வரி தராது ஏமாற்றுகிறார்கள் என்பதற்கு என்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன; அவர்கள் யார் யார் என்பதை என்னால் இரண்டொரு வாரங்களில் கூறமுடியும்; ஆனால், நான் அப்படிக் கூறுவதற்கு அனுமதியுடையவன் அல்லன்.

"அரசியல் சட்டத்தின் சில பிரிவுகள், எனது கணக்குப் புத்தகங்களுக்கு 'சீல்' வைத்துவிடுகின்றன. இந்த அரசியல் சட்டவிதிகள், நாம் நிறைமையோடு வரி வசூலிக்க முடியாது செய்துவிடுகின்றன.

"செயினிய நடவடிக்கைகள் நீதிபூர்வ விசாரணைக்கு உட்படுத்தப்பட மாட்டாது என்ற இந்திய சர்க்காரின் சட்டம், திரும்பக் கொண்டு வரப்பட வேண்டும் என்று சபை அனுமதித்தால் கோருவேன்—நான் மீண்டும் இந்த சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுவந்தால்! சபை அந்தச் சட்டத்தைத் திரும்பக் கொண்டுவர அனுமதித்தால், வரி வசூலிப்பதில், மாதா மாதம் நான் முன்னேற்றத்தைக் காட்டமுடியும்"

என்றும் அவர் சபையில் பேசியிருக்கிறார்.

அதிக மழை பெய்தால் நிறுத்திவிட புதிய முயற்சி?

விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்?

செயற்கை முறையில் மழை பெய்விக்க இந்திய விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனராம்; அதற்கான பல பரிசோதனைகளையும் நடத்தியுள்ளனராம்.

இப்போது அவர்கள் ஒரு புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்; இத்துறையில் அவர்கள் வெற்றி கண்டால், நாட்டில் எந்தப் பகுதியிலாவது அதிக மழை பெய்தால் அதை நிறுத்தி விடவோ, அல்லது அதே மழையை வேறு இடத்தில் பெய்யச் செய்விக்கவோ முடியுமாம்.

பண்டா கட்சிக்குப் பெரும் தோல்வி

கொழும்புநகரசபை தேர்தல்முடிவு

கொழும்பு நகரசபைக்கான தேர்தலில், 31 இடங்களில் 28 இடங்களுக்குப் போட்டியிட்டு, 5 இடங்களை மட்டுமே பண்டாராநாயகாவின் 'மகாஜன எக்சத் பெருமுனை' கட்சி பெற்றிருக்கிறது.

இதே 28 இடங்களுக்குப் போட்டியிட்ட கொத்தலாவலையின் ஐக்கிய தேசியக் கட்சி 18 இடங்களைப் பிடித்திருக்கிறது; மூன்று இந்தக் கட்சிக்கு 16 இடங்களே இருந்தன.

20 இடங்களுக்குப் போட்டியிட்ட 'நவலங்கா சம சமாஜ்' என்ற 'டிராட்ஸ்கி' கட்சியினர் மூன்று இடங்களை மட்டுமே பிடித்துள்ளனர்

19 இடங்களுக்குப் போட்டியிட்டு இரண்டு இடங்களில் மட்டுமே கம்யூனிஸ்டு கட்சியினரால் பிடிக்க முடிந்திருக்கிறது.

மூன்று சுயேச்சைகளும் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, தியாகராயன் செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.